# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 21.08.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் இரண்டு நாட்களுக்கு முன்புதான் நான் எனது ஜெர்மனி பயணத்தை நிறைவேற்றி விட்டு வந்தேன். இவ்வாண்டு ரமலான் மாதம் விரைவில் வந்ததன் காரணமாக ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டை முன்னதாக நடத்த வேண்டியது வந்தது. U.K. ஆண்டு மாநாட்டின் ஆரவாரத்தோடு ஜெர்மனி மாநாட்டின் ஆரவாரம் தொடங்கி விட்டது. U.K. ஆண்டு மாநாட்டிற்கு வந்த வெளிநாட்டுப் பயணிகளில் பெரும்பான்மையினர் ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்களுள் ஜமாத்அதைச் சேராதவர்களும், பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்தவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்கள், மந்திரிகள் ஆகியோரும் இதில் அடங்குவர். இந்த குழுக்களோடு ஜல்ஸாவிற்குப் பிறகு எனது சந்திப்பு தொடர்ந்து நடைபெறுகிறது. அதன் பிறகு வெளிநாடுகளிலிருந்து வருகின்ற முபல்லிக்குகள், ஜமாஅத் பிரதிநிதிகள் ஆகியோரின் சந்திப்பு, தொடர்ந்து பாகிஸ்தான், இந்தியா மற்றும் பிற நாடுகளிலிருந்து வருகை தந்துள்ள அஹ்மதிகளுடன் சந்திப்பு நடக்கிறது. இவ்வாறு ஜல்ஸாவோடு தொடர்புடைய என்னுடைய பணிகள் பல நாட்கள் வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இவ்வாண்டு ஜெர்மனியின் மாநாட்டை விரைவாக நடத்த வேண்டியது இருந்தது. எனவே பயணத்தின் நாட்கள் வரை மட்டுமே அந்த ஆரவாரம் இருந்தது. அல்லாஹ்வின் மாபெரும் அருள் நம்முடன் இருக்கிறது. ஜல்ஸா மற்றும் அதை அடுத்துள்ள பணிகள், அதை அடுத்து ஜெர்மனியின் ஜல்ஸா மற்றும் தொடர்ந்த பணிகள் அனைத்தையும் அல்லாஹ் எளிதாக்கி விட்டான். இதை நாம் ஒரு சுமை என்று கருதும் அளவுக்கு அல்லாமல் எல்லாம் மிகவும் எளிதாக, வெற்றிகரமாக அமைந்திருந்தது. இதற்காக நான் இறைவனுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் அது குறைவுதான்.

இரண்டாவதாக, எல்லா அஹ்மதிகளுக்கும் இந்த ஜல்ஸாவின் தொடர் தெரிய வந்தது. ஒரு நண்பர் எனக்கு கடிதம் எழுதும்போது மாநாட்டைப் பார்ப்பதிலும், கேட்பதிலும் எங்களுக்கு சுகம் ஏற்படுகிறது. இவ்வாறு வீட்டில் லங்கரில் சமைக்கப்படும் உணவை சமைத்து வீட்டிலேயே ஜல்ஸாவைப் போன்ற ஒரு சூழ்நிலையை அமைத்துக் கொண்டு ஜல்ஸாவை கேட்டுக் கொண்டிருக்கின்றனர். U.K. –வின் ஜல்ஸாதான் இன்னும் நடக்கிறது என்ற உணர்வு எங்களுக்கும் இருந்தது. இன்னும் அதே ஆன்மீக சூழ்நிலை வீட்டில் இருந்து வருகிறது.

ஜல்ஸாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட ஒவ்வொருவரும் ஜல்ஸாவின் மூலம் பலன் பெற வேண்டும் என்பதே நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த உணர்வு இல்லையென்றால் ஜல்ஸாவை நடத்துவது பலன் இல்லாமல் போய் விடும். ஏனென்றால் மனிதப் பிறப்பின் குறிக்கோள் இறைவனின் திருப்தியை அடைய வேண்டும் என்பதாகும். இறை வணக்கத்தின் பக்கமும், வாழ்வில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதன் பக்கமும் கவனம் ஏற்பட வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் ஜமாஅத் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி, சிந்தனைகளையும், எண்ணங்களையும் தூய நோக்கத்தை அடைவதன் பக்கம் இட்டுச் செல்ல வேண்டும். இந்த ஆன்மீக முன்னேற்றத்தை வருடம் முழுவதும் புதுப்பித்து வர வேண்டும் என்பதே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாடுகளை நடத்துவதன் குறிக்கோளாகக் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறிருக்கும்போது அடுத்த ஆண்டு ஜல்ஸா வந்து விடும். பிறகு முன்பை விட அதிகமாக ஆன்மீகத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

U.K. மற்றும் ஜெர்மனியின் ஆண்டு மாநாடுகள் அடுத்தடுத்து நிகழ்ந்ததன் காரணமாக மட்டும் இதன் தொடர்ச்சியின் இன்பத்தை சுவைக்கக் கூடாது. மாறாக இந்த தொடர்ச்சியை அடுத்த ஆண்டு மாநாடு வரை

நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். இந்த நிலை நம்மில் ஏற்பட்டு விட்டால் நாம் குறிக்கோளை அடைந்து விட்டோம் என்று எண்ணிக் கொள்ளுங்கள். இந்த தொடர்புகளை நிலைநாட்டுவதற்காக இறைவணக்கத்தின் பக்கம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கவனமூட்டியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை இவ்வாறு கூறினார்கள்:**

பெரிய பாவங்களை விட்டு விலகுவதற்கு ஐந்து வேளை தொழுகை இருக்கிறது. ஒரு ஜுமுஆவிலிருந்து அடுத்து ஜுமுஆ வரை, ஒரு ரமலானிலிருந்து அடுத்து ரமலான் வரை பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. எனவே நன்மையின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். அது நிலைத்திருக்க வேண்டும். அந்த நன்மைக்காக காத்திருத்தல் ஆகியவை ஒரு மூஃமினை பிறரிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. நன்மையை நிலைத்திருக்க வைப்பதற்காக தொடர் முயற்சியும், விருப்பமும் இருந்தால்தான் பெரிய பெரிய பாவங்களிலிருந்து மனிதன் தப்பிக்க முடியும். நன்மையை நிலைத்திருக்கச் செய்வதற்காக ஏற்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கான வழியாக அமைகிறது.

இன்ஷா அல்லாஹ் இரண்டு நாட்களில் அதாவது நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முதல் இந்த தொடர்ச்சியை நிலைநாட்டுவதற்காக ரமலான் ஆரம்பமாக உள்ளது. ஜல்ஸாவின் ஆன்மீக சூழ்நிலையை நிலைத்திருக்கச் செய்வதற்காக ஆன்மீக உணவுத்தட்டு (மாயிதா) உடன் பௌதீக உணவையும் சுவைத்து மகிழ்கிறோம். ரமலானின் இந்த அருளுக்குரிய நாட்களில் நாம் பௌதீக உணவைக் குறைத்துக் கொண்டு ஆன்மீக முன்னேற்றத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்தவாறு இந்த மாதத்தை கழிக்க வேண்டும். குறிப்பாக, கவனத்தோடும் சிறப்பான முயற்சியோடும் அல்லாஹ்வின் அருளாலும், அவனால் வழங்கப்பட்ட தவ்ஃபீக்கோடும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதன் பக்கம் நாம் காலடி எடுத்து வைக்க வேண்டும் – இன்ஷா அல்லாஹ். அதோடு நம்மில் தூய மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ரமலானின் உரிமையை நிறைவேற்றுபவர்களாக நம்மை ஆக்குவானாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜல்ஸாக்களை ஜமாஅத்தில் ஆரம்பித்து நமக்காக ஒரு அதிகப்படியான, சிறப்பான Training Camp ஐ அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இந்த வகையில் நாம் மிகவும் பெயர் பெற்ற பாக்கியசாலிகள் ஆவோம். எல்லா வகையான நன்மைகளிலும் முன்னேறுவதன் பக்கம் கவனமூட்டுகின்ற ஆன்மீக சூழ்நிலையை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். அறிவு சார்ந்த, மார்க்கம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த சுற்றுச்சூழலுக்காக ஏற்பாடுகள் செய்து தரப்படுகின்றன. இதில் நாம் நம்மை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் செலுத்துகிறோம். நாம் நம்மையே ஆராய்கிறோம். ஜல்ஸா முடிந்தவுடன் தூயவான்களிடமிருந்து கடிதங்கள் வர ஆரம்பித்து விடுகின்றது. அதில் அவர்கள், ஜல்ஸா எங்களுக்கு அளவில்லாத அறிவு, மார்க்கம், ஆன்மீகம் ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டியுள்ளது என்று குறிப்பிட்டு எழுதுகிறார்கள்.

அஹ்மதிகள் தங்களைத் தாங்களே ஆராயும்போது இதன் பக்கம் கவனம் செலுத்தினால் ஒரு உண்மையான அஹ்மதி அச்சத்திற்கு ஆளாகி விடுகின்றார். பிறகு மிகவும் வேதனையோடு துஆ செய்யும்படி விண்ணப்பிக்கிறார்கள். இந்த எண்ணம் எப்போதும் எங்களிடம் நிலைத்திருக்கவும் தூய்மையான எண்ணத்தோடு நாங்கள் நிரந்தரமாக இந்த சிந்தனையை கொண்டிருக்கவும் துஆ செய்யுங்கள் என்று எழுதுகின்றார்கள். ஆக, இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு அழகு ஆகும். இந்த அழகை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் தனது ஜமாஅத்தில் உருவாக்கியுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் தமது ஜமாஅத்தின் தூய்மையை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்.

நமது ஜமாஅத்தில் காணப்படுகின்ற முன்னேற்றம் மற்றும் மாற்றங்களை நன்றாக சிந்தித்துப் பார்த்தால் இக்காலத்தில் இது நம்மைத் தவிர பிறரிடம் இல்லை என்பது தெரிய வரும்.

இங்கு முன்னேற்றம் என்று கூறப்பட்டுள்ளது. ஜமாஅத் சகோதரர்களிடம் காணப்படும் தூய்மை, விசுவாசம் மற்றும் ஈமான் ஆகியவற்றின் முன்னேற்றமாகும்.

ஆக இது ஜமாஅத்தின் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வைத்திருந்த அளவில்லாத நல்லெண்ணமாகும். இது ஒரு உண்மையான அஹ்மதியை ஆட்டிவிடும் விஷயமாகும். நாம் இந்த கூற்றுக்களை முன் நிறுத்தி நம்மை நாமே ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் ஒன்றன்பின் ஒன்றாக நன்மைகள் உருவாகிக் கொண்டே இருக்கும். நாம் நம்மை சீர்திருத்துவதன் பக்கம் முன்னேறிக் கொண்டே செல்வோம்.

இந்த ஜல்ஸாக்களால் நமக்கு ஏற்படுகின்ற இரண்டாவது பலன் யாதெனில் இறைவன் நமது ஜமாஅத்தின் மீது காட்டி வருகின்ற எண்ணற்ற அருட்கொடைகளைப் பார்த்து, கேட்டு இறைவனுக்கு நன்றி கூறுவதன் பக்கம் கவனம் ஏற்படுகிறது. இந்த அருட்கொடைகள் எல்லாவற்றையும் பார்த்து ஒரு அஹ்மதியின் சிரம் இறைவனின் சன்னிதானத்தின்பால் குனிந்து கொண்டே செல்கிறது. அல்லாஹ் எப்போதும் நம் மீது அருட்கொடைகளைப் பொழிந்து கொண்டே இருப்பானாக. நாம் எப்போதும் அவனது நன்றியுடைய நல்லடியார்களாக இருக்க இறைவன் நமக்கு எப்போதும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

நான் (நேரடியாக) கலந்து கொள்கின்ற ஜல்ஸாவைப் பற்றி ஜல்ஸா முடிந்தவுடன் எடுத்துக் கூறுவது வழக்கமாகும். இது தொடர்பாக இறைவனுக்கு நன்றி கூறுவதோடு பணிபுரிகின்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும் நன்றி கூறுவது எனது வழக்கமாகும். வேலை செய்தவர்களைப் பற்றி நான் ஏதாவது கூற வேண்டும் என்று அவர்களும் பொதுவாக விரும்புகிறார்கள். எனவே இன்று நான் ஜெர்மனியின் ஜல்ஸா தொடர்பான சிலவற்றை எடுத்துக் கூறுவேன். இங்கு நான் ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதாவது புகழ்ச்சியை விரும்பும் நோக்கத்தோடு நமது பணியாளர்கள் பணிகள் செய்வதில்லை. மாறாக, இவர்கள் எந்தவித உள்நோக்கமுமின்றி இறைவனின் விருப்பத்தைப் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தொண்டு செய்கின்றனர். இவர்கள் மிக எழுச்சியுடன் செய்கின்ற தொண்டை வேறு யாரும் உலக ஆதாயத்திற்காக இவ்வாறு தொண்டாற்றவே முடியாது. எனவே, இந்த பணியாளர்களைப் பற்றி இவர்கள் தங்களைப் புகழ்ந்து பேச வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்று நாம் கருதினால் இது நாம் அவர்களின் மீது கொள்கின்ற மிக மோசமான தப்பெண்ணம் ஆகும். வேலை செய்கின்றவர்கள் தங்களின் புகழ்ச்சியை கேட்க விரும்புகிறார்கள் என்று கூறினால் இது தவறாகும். சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய குறைகள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றின் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டப்படுகிறது. நமது பணியாளர்கள் தமது பலவீனங்களை ஒரு (Red Book) சிவப்பு புத்தகத்தில் எழுதுகிறார்கள். இது ஜல்ஸாவிற்காக வைக்கப்பட்டுள்ள புத்தகமாகும். இந்த தவறுகள் அடுத்து வருகின்ற காலத்திற்கு மீண்டும் ஏற்படக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்கிறார்கள். இதுவே ஈமான் கொண்டவர்களின் தனிச் சிறப்பாகும். ஈமான் கொண்ட ஒருவர் எப்போதும் தனது பலவீனத்தை கண்காணித்து வருவார். ஜமாஅத் உறுப்பினர்களோடு கிலாஃபத்திற்கு இருக்கின்ற தொடர்பின் காரணமாக காலத்தின் கலீஃபாவுடைய சிந்தனைகள் தம் வரை எட்ட வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக விரும்புகிறார்கள். காலத்தின் கலீஃபா மகிழச்சியை வெளிப்படுத்தினால் அல்லாஹ்வின் முன் நன்றி கூறும் விதமாக சிரம் பணிகிறார்கள். ஏதாவது குறைகளையும் பலவீனங்களையும் சுட்டிக் காட்டினால் இறைவன் கிலாஃபத் என்ற அருளை நமக்கு வழங்கியதற்காக இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். தூய இறக்க உணர்வோடு, ஜமாஅத் உறுப்பினர்கள் என்ற முறையில் ஜமாஅத் உறுப்பினர்களின் நன்மைக்காக சரியான பாதையில் இது இட்டுச் செல்கிறது. தகுதிகளை உயர்த்துவதற்காக அவர்களின் குறைகளை அவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறது. அல்லாஹ் கிலாஃபத்தோடு ஜமாஅத்திற்கு உள்ள தொடர்பையும் உறவையும் இன்னும் உறுதியாக்கிக் கொண்டே செல்வானாக.

ஜெர்மனி ஜல்ஸாவில் தொண்டு புரிநத ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நன்றி கூறியவாறு உங்களுக்கு கூற விரும்புவது என்னவென்றால், நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின்

விருந்தினர்க்கு உபசரிப்பதன் ஹக்கை நிறைவேற்ற முழுமையாக முயற்சி செய்துள்ளீர்கள். இப்போது பணிகளைச் செய்த நீங்கள் முதிர்ச்சி அடைந்து விட்டீர்கள். நீங்கள் செய்திருக்கின்ற தொண்டில் குறை காண வேண்டும் என்ற எண்ணத்தோடு முயற்சி செய்து குறைகளைச் சொல்லலாமே தவிர பொதுவாக கூறுவதென்றால் மிகச் சிறப்பாக நீங்கள் பணியாற்றி உள்ளீர்கள். அவ்வாறு குறைகளைக் கண்டுபிடித்துக் கூறினால் நல்லெண்ணம் குறைவாகவும், ஆட்சேபனைகள் அதிகமாகவும் இருக்கும். 100% Perfection எங்கும் இருக்க முடியாது. ஆனால் மனித சக்திக்கு உட்பட்டு முடிந்த அளவு சிறப்பாக பணியாற்ற முயற்சி செய்யப்படுகிறது. இந்தப் பணிகளைச் செய்வதற்கு சிறப்பான முறைப்படியான பயிற்சி ஏதும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவ்வாறு இருந்தும் சிறப்பான முறையில் பணிகளைச் செய்துள்ளீர்கள்.

மக்களில் பலவகைப்பட்டவர்கள் இருக்கிறார்கள். பொறுப்புகளை அவர்களிடம் ஒப்படைத்தால் மிகச் சிறந்த முறையில் அதை நிறைவேற்றுகின்றனர். ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தமது எல்லா திறமைகளையும் பயன்படுத்துகிறார்கள். பணியாளர்களின் பணியைப் பார்த்து உள்ளம் அல்லாஹ்வின் புகழ்ச்சியாலும், நன்றி உணர்வாலும் நிறைந்து விடுகிறது. ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களும், பார்ப்பவர்களும் இந்த தொண்டுகளை செய்பவர்களுக்கு நன்றி கூற வேண்டும். இவர்கள் தியாக மனப்பான்மையோடும், அர்ப்பணிப்போடும் பணியாற்றுகிறார்கள். இவர்கள் இந்தப் பணிகளைச் செய்வதற்கு நிபுணத்துவம் பெறாத மக்கள் ஆவர். சின்னச்சின்ன குறைபாடுகள் மட்டும் நேர்ந்து விடுகிறது. இவ்வாண்டு குறிப்பாக ஜெர்மனி மக்கள் மிக கடுமையாக உழைத்திருக்கிறார்கள். மிகக் குறுகிய கால அவகாசத்தில் ஜல்ஸாவிற்கான ஏற்பாடுகளை முழுமைப்படுத்தியுள்ளார்கள்.

ஜெர்மனியின் ஜல்ஸாவின் Officer தினமும் ஜல்ஸாவிற்காக வகாரே அமல் செய்தவற்கு 250 அல்லது 300 பேர் தேவை என்று அறிவிக்கும்போதெல்லாம் 40 அல்லது 50 பேர் அதிகமாகவே வகாரே அமல் செய்வதற்காக வந்தார்கள் என்று கூறினார். உலகில் எல்லா இடங்களிலும் அஹ்மதிகளின் உணர்வு இவ்வாறு மிகைத்து காணப்படுகிறது. ஜமாஅத்தின் எந்தவொரு பணிக்காக எப்போது அழைத்தாலும் ஓடோடி வருகிறார்கள். எனவே இந்த உணர்வை நிலைத்திருக்கச் செய்வது ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும்.

இவ்வாண்டு ஜெர்மனியின் ஜல்ஸாவின் சில நாட்களுக்கு முன் சில காரணத்தினால் ஏற்பாடுகளில் மேல்மட்டத்தில் சில மாற்றங்களைச் செய்தேன். ஆனால் ஏற்பாடுகளைப் பார்த்து ஜல்ஸாவில் Officer மாற்றப்பட்டுள்ளார் என்பதே தெரியவில்லை. அவ்வளவு நேர்த்தியாக எல்லா பணிகளும் முழுமையாக நடைபெற்றிருந்தன. இதற்கு முந்தைய வருடங்களில் ஏற்பட்டிருந்த குறைபாடுகளை மிகவும் அழகிய முறையில் சரி செய்ய முயற்சி செய்யப்பட்டுள்ளது. U.K. ஜல்ஸாவில் இவர்களுக்கு தென்பட்ட சிறப்பு அம்சங்களை மனதில் கொண்டு செயல்பட்டு அதிலிருந்து பலன் அடைந்துள்ளனர். சிறப்பு அம்சங்களை எங்கு கண்டாலும் அதை ஏற்றுக் கொள்வது ஒரு மூஃமினுடைய பண்பாகும். இதை விட்டு விட்டு ஒரு பௌதீகவாதியைப் போன்று பொறாமை கொண்டு அதில் குற்றங்குறைகளைத் தேடக் கூடாது. தனிப்பட்ட முறையானாலும் ஜமாஅத் அளவிலானாலும் ஒன்றை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். ஒரு நல்ல விஷயத்தைப் பார்த்து பாடம் படிப்பதற்குப் பதிலாக பொறாமை உணர்வு கொண்டால் அதில் பரக்கத் இருக்காது. ஈமான் கொண்டவர் எப்போதும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்பவராக இருக்கிறார். பிறரிடமிருந்து பாடம் பெறுகிறார். சிறப்பம்சங்களைப் பார்த்து அதை புகழ்கிறார். அவ்வாறே அதை தானும் பேணுகிறார். அதைப் போன்று குறைகளைக் கண்டால் அதை மூடி மறைக்கிறார்.

U.K. ஜல்ஸாவிற்குப் பிறகு நான் ஒரு சில விஷயங்களின் பக்கம் கவனமூட்டினேன். ஏற்பாடுகளில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட சில அறிவுரைகளைச் செய்தேன். குறிப்பாக விருந்தினர்கள் வசிக்கின்ற கூடாரங்களில் பாதுகாப்பு இன்னும் அதிகரிக்க வேண்டும் என நான் குறிப்பிட்டிருந்தேன். அதன் மீது முழுமையாக அமல் செய்ய முயற்சி செய்திருக்கிறார்கள். ஜெர்மனி மக்கள் இதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். ஆக ஒவ்வொரு துறையிலும் உள்ள மாணவ மாணவிகள் பணியாற்றுகின்ற ஆண்கள் பெண்கள் மிகச் சிறப்பாக பணியாற்றி உள்ளார்கள்.

கலீஃபாவின் புறமிருந்து எங்கள் மீது யார் கண்காணிப்பாளராக நியமிக்கப்படுகிறார்களோ அவர்களுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதை ஜெர்மனியைச் சேர்ந்த பணியாளர்கள் நிரூபித்துள்ளார்கள். நமது எல்லாப் பணிகளையும் இறைவனுடைய விருப்பத்திற்காகவே செய்ய வேண்டும். பௌதீகவாதியைப் போன்று ஒரு தனி நபரோடு இருக்கின்ற தொடர்பின் காரணமாக பணியாற்றக் கூடாது. மாறாக காலத்தின் கலீஃபாவின் கட்டளைக்கேற்ப நமது எல்லா பணிகளையும் வெற்றிகரமாக செய்ய வேண்டும்.

ஜெர்மனி ஜல்ஸாவில் பணிபுரிந்த அனைத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் நான் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு நீங்கள் உபசரிக்கின்ற உரிமையை நிறைவேற்றுவதற்கான முயற்சியை மிகச் சிறப்பாக செய்துள்ளீர்கள். இதுபோன்றே ஜெர்மனியின் M.T.A பணியாளர்களும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு மிகவும் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். இலண்டனிலிருந்து M.T.A –வின் மேலிடத்து பணியாளர்களின் குழு அங்கு சென்றிருந்தது. அவர்களோடும் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நற்கூலியை வழங்குவானாக.

ஒவ்வொரு வருடமும் ஜெர்மனியின் லங்கர் கானா தொடர்பான பணியைப் பற்றி நான் குறிப்பிடுவது வழக்கம். இதில் மூன்று சகோதரர்கள் கடுமையாக உழைப்பவர்கள் ஆவர். இவர்கள் செய்த மிகச் சிறந்த செயல் தேக்சாக்களை கழுவுகின்ற இயந்திரம் ஆகும். இதை இந்த சகோதரர்கள்தான் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வாண்டு இவர்கள் இன்னும் நவீனப்படுத்தியுள்ளார்கள். இதை முழுமையாக Automatic ஆக்கியுள்ளார்கள். இதில் எல்லாம் கணினிமயமாக்கியுள்ளார்கள். தேக்சாவை இயந்திரத்திற்குள் எடுத்துக் கொள்கிறது. பிறகு அதை கழுவுகிறது. கழுவிய பின் அதை வெளியே எறிந்து விடுகிறது. இந்த மூன்று சகோதரர்களுக்கும் அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக. இவர்களுடைய அறிவை அல்லாஹ் இன்னும் வளப்படுத்துவானாக. இம்முறை கூடுதலாக இரண்டு Technician அல்லது Enginieers –ஐ உள்ளூர் அளவில் நியமித்திருக்கிறார்கள். இதில் ஒருவர் போஸ்னியாவைச் சேர்ந்தவர். மற்றவர் ஜெர்மனியைச் சேர்ந்தவர். அனைவருமே மிக நன்றாக பணிபுரிந்தார்கள்.

நான் கூற விரும்பிய இரண்டாவது விஷயம் என்னவென்றால், பொதுவாக ஜெர்மனி ஜல்ஸாவின் பயணத்திற்குப் பிறகு அங்கு நடந்த சம்பவங்கள் மற்றும் இது தொடர்பான ஒளிபரப்பப்படாத விஷயங்களையும் மக்கள் கேட்பதில் ஆர்வம் காட்டுகின்றார்கள். இதை கடிதத்தின் மூலம் மக்கள் எழுதிக் கேட்பதுண்டு.

ஆக, நாம் நன்றாக அறிந்திருப்பது போன்று இந்த பயணங்கள் அனைத்தும் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படுகிறது. ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக வருகின்ற ஒவ்வொரு நபரின் பயணமும் இறைவனுக்காகவே ஆகும். இறை அருள்களைப் பெறுவதற்காக மூன்று பகல், இரவுகளில் ஒன்றுகூடுகின்றனர். இவ்வாறு பயணம் மேற்கொள்கின்றவர்களுக்கு அல்லாஹ் நற்செய்தியையும் வழங்குகிறான். அல்லாஹ்வின் விருப்பம், மற்றும் அவனது அருட்கொடைகள் கிடைக்கும் என்பதே அவனது நற்செய்தியாகும். நாம் இறைவனுக்காக பயணம் செய்கின்றோம் என்று வெறும் வாயளவில் கூறுவது போதுமானது அல்ல. மாறாக, சில சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

**சூரா தவ்பாவில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

பாவமன்னிப்பு வேண்டுபவர்கள், இறைவனை வணங்குபவர்கள், புகழ்பவர்கள் (இறைவனின் பாதையில்) பயணம் செய்பவர்கள், (இறைவன்பால்) குனிபவர்கள், (தொழுகையில்) சிரம் பணிபவர்கள், நன்மையை ஏவுபவர்கள், தீமையைத் தடுப்பவர்கள், அல்லாஹ்வின் வரம்புகளைப் பாதுகாப்பவர்கள் ஆகிய ஈமான் கொண்டவர்களுக்கு நீர் நற்செய்தி கூறுவீராக.

எனவே இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வணங்குபவர்கள், இறைவனைப் புகழ்பவர்கள், இறைவழியில் பயணம் மேற்கொள்பவர்கள், அவன்பால் குனிபவர்கள், சிரம் பணிபவர்கள், நல்லவற்றை போதிப்பவர்கள், தீமையிலிருந்து தடுப்பவர்கள் ஆகிய இவ்வனைவருக்கும் அல்லாஹ் நற்செய்தி வழங்கியுள்ளான்.

ஆக, பயணத்தின் அனுபவங்களை மக்கள் கேட்க விரும்புகிறார்கள் என நான் கூறியிருந்தேன். ஆகவே சுருக்கமாக இதை எடுத்துரைக்கிறேன். அல்லாஹ்வின் விருப்பத்திற்காக செய்யப்படுகின்ற பயணத்தில் அவன் அதிக பரக்கத்தை வழுங்குகிறான். இந்த வசனத்தில் நான் கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் தான் இறைவன் அதில் பரக்கத்தை ஏற்படுத்துவான்.

இங்கிருந்து நாங்கள் புறப்பட்டு ஒரு இரவு பெல்ஜியம் மிஷன் ஹவுஸில் தங்கினோம். அங்கு முறைப்படியான பள்ளிவாசல் கிடையாது. ஏனென்றால் அங்குள்ள உள்ளூர் கவுன்சில் பள்ளிவாசல் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதில்லை. எனவே இரண்டு சின்னச்சின்ன அறைகள் இருக்கின்றது. அது நமது மிஷன் ஹவுஸோடு இணைந்து இருக்கிறது. அது ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொழுவதற்காக பயன்பட்டு வருகிறது. நமது இந்த center என்ற ஒரு கிராமத்தில் அமைந்திருக்கிறது. அங்குள்ள மேயர் இந்த முறை என்னிடம் நேரத்தைப் பெற்று என்னை சந்திக்க வந்திருந்தார். பல்வேறு அம்சங்களைப் பற்றி கருத்துப்பரிமாற்றம் செய்து கொண்டிருந்தோம். நான் பள்ளிவாசலைப் பற்றி பேசியதும் அவர் கூறினார். தனிப்பட்ட முறையில் என்னுடைய கருத்து பள்ளிவாசல் கட்ட அனுமதி வழங்க வேண்டும் என்பதுதான். ஆனால் இங்குள்ள உள்ளூர்வாசிகளும் கவுன்சிலைச் சேர்ந்த இன்னும் பல பிரமுகர்கள் ஜமாஅத்தைப் பற்றிய நல்லெண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஜமாஅத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் வந்து கலந்து கொள்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இங்கு ஜமாஅத்தின் பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகள் நடக்கும் போது மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். போக்குவரத்து நெரிசல் ஏற்படும். மக்களுக்கு தொல்லை நேரிடும். இன்னும் சில சமயங்களில் நாரே தக்பீர் முழக்கமும் அதிகமாக இருக்கும். அதையும் இந்த மக்கள் சகித்துக் கொள்கிறார்கள். ஆனால் பள்ளிவாசல் கட்டுவதற்கு இவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள். இவர்களை ஒப்புக் கொள்ள வைப்பதற்கு இன்னும் அவகாசம் தேவைப்படும். ஆனாலும் இன்னும் நாம் பொறுத்துக் கொண்டிருப்பது நமக்கு அங்கு முடியாத காரியமாகும். எனவே அங்குள்ளவர்களுக்கு நான் கூறியதாவது, நீங்கள் நகர்ப்புறத்தில் பள்ளிவாசலுக்காக நிலத்தை தேட ஆரம்பித்து விடுங்கள். விரைவாக பெல்ஜியத்தில் நாம் முதல் பள்ளிவாசலைக் கட்ட வேண்டும் இன்ஷா அல்லாஹ். பள்ளிவாசல் விரைவில் கட்டுவதற்கான நிலை அங்கு உருவாகி விடும் என்று நம்புகிறேன் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் நமது இந்த விருப்பத்தையும் பூர்த்தி ஆக்குவானாக. நமது முதல் ஆசை என்னவென்றால், அடுத்த ஐந்து அல்லது ஆறு வருடங்களில் ஐரோப்பாவின் ஒவ்வொரு நாட்டிலும் குறைந்தபட்சம் நாம் ஒரு பள்ளிவாசலைக் கட்ட வேண்டும். பிறகு இன்ஷா அல்லாஹ் பள்ளிவாசல் இல்லாத இடங்களில் மெல்ல மெல்ல பள்ளிவாசல்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்லும்.

பெல்ஜியம் பள்ளிவாசலுக்காக அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினரும் உதவி ஒத்தாசைகள் செய்வதாகக் கூறியுள்ளார். அந்த பெண் M.P. ஜல்ஸாவுக்கும் வந்திருந்தார். சுருக்கமான செய்தியையும் வாசித்தார். இவர் ஜமாஅத்தின் தாக்கம் பெற்றவர் ஆவார். நான் பெல்ஜியம் செல்வதற்கு முன்பே மிஷன் ஹவுஸில் இவர் இருந்தார். வரவேற்பவர்களோடு நானும் இருப்பேன் என்று கூறி வெகுநேரம் நின்றிருந்தார். அல்லாஹ் இவர்களுடைய உள்ளத்தை திறப்பானாக. அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கும் முன் வர வேண்டும். இவர்களுடைய பதவிக்காலம் முடிவடையப் போகிறது.

பிறகு இன்னொரு பெண்மணியோடு எனது சந்திப்பு இருந்தது. அங்குள்ள மக்கள் மத்தியில் தப்லீக் செய்வதற்கு மிகச் சிறந்த ஆலோசனைகளை வழங்கினார்கள். அவர்களுடைய ஆலோசனைகள் மிக நன்றாக இருந்தது. அவர்கள் மனதளவில் அஹ்மதி ஆகிவிட்டார்கள். வெளிப்படுத்துவதற்கு சற்று அஞ்சுகிறார்கள் எனத் தெரிகிறது.

பெல்ஜியத்தில் இந்தோனேஷியாவைச் சார்ந்த ஒருவர் என்னை சந்தித்தார். இவர் கடந்த சில வருடங்களாக பெல்ஜியமில் வசிக்கிறார். இங்கேயே திருமணம் முடித்திருக்கிறார். இவர்களோடு பல்வேறு அம்சங்களில் பேசிக் கொண்டிருந்தேன். இந்தோனேஷியாவைச் சேர்ந்த அந்தத் தோழருக்கு இறைவனின் மீது நம்பிக்கை இல்லை. இந்தத் தம்பதிகள் U.K. ஜல்ஸாவிலும் வந்திருந்தார்கள். U.K. வருவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன் தான் இவர் அஹ்மதி ஆகி இருந்தார். இங்கு வந்திருக்கும்போது அவர் கூறினார். இறைவன் இருக்கிறான் என்பதை முன்பு நான் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தேன். கடவுளே கிடையாது என்று நான் எண்ணியிருந்தேன். ஆனால் ஜமாஅத்தின் நூல்களைப் படித்து இங்குள்ள முபல்லிகிடம் பேசிய போது நான் இறைவன் உண்டு என்பதை ஏற்றுக் கொண்டேன். பிறகு அஹ்மதி ஆகிவிடுவதைத் தவிர எனக்கு வேறு வழியே தெரியவில்லை என்று கூறினார்.

பிறகு அஹ்மதியாக மாறிய Moroco பெண்மணி தனது பெற்றோர் புறமிருந்து எழுந்த பல்வேறு ஆட்சேபனைகளை எடுத்து வைத்தார். இந்த ஆட்சேபனைகள் எல்லாம் ஜமாஅத்தின் மீது பழைமையான அவ்வப்போது தொடுக்கின்ற ஆட்சேபனைகள்தான். இவ்வாறு ஏறக்குறைய ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

அங்கிருந்து நான் வெளியேறியதும் ஆப்பிரிக்கா மற்றும் பெல்ஜியத்தைச் சேர்ந்த புதிய அஹ்மதிகளும், அனுதாபிகளும், நண்பர்களும் வெளியே நின்று கொண்டிருந்தனர். அவர்களோடு சந்திப்பு இருந்தது. பிறகு ஒரு இளைஞர் தன்னை என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் பெல்ஜியத்தைச் சேர்ந்தவர். ஒரு வருடத்திற்கு முன் அவர் டாக்டர் படித்திருக்கிறார். ஒரு மருத்துவமனையில் வேலை செய்து வருகிறார். அவரோடு அறிமுகம் ஆன பிறகு நமது முபல்லிக் சாஹிப், அமீர் சாஹிப் இருவரும் இவர் அஹ்மதிய்யத்திற்கு மிக நெருக்கமாக உள்ளார். ஆனால் இன்னும் பைஅத் செய்யவில்லை என்று கூறினார். முபல்லிக் சாஹிப் இவ்வாறு என்னிடம் கூறிக் கொண்டிருக்கும் போதே டாக்டர் சாஹிப் U.K. ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைப் பார்த்தேன். அதில் நிகழ்ந்த உலகளாவிய பைஅத்தின் போதே நான் பைஅத் செய்து விட்டேன் என்று கூறினார். முபல்லிக் சாஹிபுக்கும், அமீர் சாஹிபுக்கும் இது தெரியாது. இதுவும் அல்லாஹ்வின் மாபெரும் அருட்கொடையாகும். அவனே மக்களை இதன்பால் அனுப்புகிறான். பிறகு தொழுது விட்டு நேரடியாகவும் அவர் பைஅத் செய்து விட்டார்.

ஜெர்மனியின் ஜல்ஸாவின் பணியாளர்களைப் பற்றி நான் ஏற்கனவே உங்களுக்கு கூறி விட்டேன். ஜெர்மனி ஜல்ஸாவை எல்லாரும் பார்த்தீர்கள். M.T.A. முழு உலகிற்கும் இதை ஒளிபரப்பியது. அல்லாஹ்வின் அருளால் வெற்றிகரமான ஜல்ஸாவாக இருந்தது. மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 32,000க்கும் அதிகமாகவே இருந்தது இது கடந்த முறை நடந்த மாநாட்டிற்கு ஒப்பாக இருந்தது. பள்ளி விடுமுறையாக இருந்ததால் மக்கள் இம்முறை அதிகமாக வந்தார்கள். உண்மை என்னவென்றால் அல்லாஹ் தனது அருளைப் பொழிய ஆரம்பித்தால் நமது கணிப்புகள் எல்லாம் ஒன்றும் அற்றதாகி விடுகிறது.

மாநாட்டின் நிகழ்ச்சிகள் அனைத்தும் இறைவனின் அருளால் மிக நன்றாக இருந்தது. அனைவரும் சொற்பொழிவுகளைக் கேட்டிருப்பீர்கள். சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவுகளால் நீங்கள் அறிவு மற்றும் ஆன்மீக பலன்களை அடைந்திருப்பீர்கள். நல்ல ரசனையாக இருந்தது என்ற அளவிற்கு மட்டும் இதை நீங்கள் ரசிக்கக் கூடாது. மாறாக இதை உங்கள் வாழ்க்கையின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். உங்கள் உள்ளத்தில் தூய்மையை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள். இந்த ஜல்ஸாவை எவரும் ஆர்வத்தோடு ரசிக்கக்கூடிய ஜல்ஸாவாக நாம் ஆக்கிக் கொள்ளக் கூடாது. அவ்வாறே தற்காலிகமான ஆன்மீக பலனை அடைவதற்காகவும் இதை ஆக்கிக் கொள்ளக் கூடாது.

சூரா தவ்பாவின் வசனத்தை ஆதாரமாகக் காட்டி நான் கூறியது போன்று, மாநாட்டின் அருட்களைக் கொண்டு பயனடைந்தவாறு இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள சிறப்புத் தன்மைகளை உருவாக்க முயற்சி செய்ய

வேண்டும். இறைவனை வணங்குபவர்களாக நாம் இருக்க வேண்டும். சிரம் பணிபவர்களாகவும், குனிபவர்களாகவும், நல்லவற்றை போதிப்பவர்களாகவும், தவிர்ந்திருப்பவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் நம்மில் இவ்வனைத்து மாற்றங்களையும் ஏற்படுத்தினால் தான் இந்தப் பணிகளை செய்யப்பட்டவர்களாக நாம் இருக்க முடியும்.

ஜல்ஸாவின் சிறப்பு அம்சங்களில் ஒன்று இவ்வாண்டு 10 ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஜெர்மனி ஜல்ஸாவிற்கு பிரதிநிதிகள் வந்திருந்தனர். பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா, மால்வா, ஐஸ்லேண்ட், அல்பானியா, போஸ்னியா, மஸடோனியா, கொஸோவோ, லிதுவேனியா ஆகிய நாடுகளிலிருந்து மக்கள் ஜல்ஸாவிற்கு வந்திருந்தனர். இதில் அஹ்மதிகளும் இருந்தனர். முஸ்லிம் அல்லாதவர்களும், அஹ்மதி அல்லாத பிற முஸ்லிம்களும் இதில் பங்குபெற்றனர். சனிக்கிழமை மாலையில் அனைவரையும் ஒன்று கூட்டி அமீர் சாஹிப் ஒரு Meeting -ற்கு ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் ஒவ்வொரு குழுவோடும், ஒவ்வொரு நாட்டிலிருந்து வந்த பிரதிநிதிகளோடும் தனித்தனியே சந்தித்தால் மட்டுமே நல்ல பலன் தரும் என்பதை நான் உணர்ந்தேன். அதில் அங்குள்ள சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் அவர்களிடம் பேச வேண்டும். இதன் அடிப்படையில் ஜல்ஸா முடிவடைந்த பின் அடுத்த நாள் இந்தக் குழுக்களோடு தனித்தனியே சந்திப்பு இருந்தது. அந்த சந்திப்பின் போது அவர்களுடைய உணர்வுகளையும், ஜல்ஸாவில் அவர்கள் பெற்ற அனுபவங்களையும் நான் கேட்டேன். ஒவ்வொருவரும் ஜல்ஸாவின் ஏற்பாட்டை மிகவும் வியப்போடு பாராட்டினார்கள். ஒவ்வொருவரும் நாங்கள் இப்போது உங்கள் ஜமாஅத்தை மிக நெருக்கமாக பார்த்து விட்டோம். ஜல்ஸாவையும் கண்டோம். இனி நாங்கள் இந்த ஜமாஅத்தோடு எங்கள் தொடர்புகளை இன்னும் வலுப்படுத்துவோம் என்று கூறினார்கள். இவ்வளவு பெரும் அளவிலான கூட்டத்தை சமாளிப்பது அவ்வளவு சாதாரண விஷயமல்ல என்று விதிவிலக்கு இன்றி எல்லாரும் கூறினார்கள். இவர்கள் உலகவாதிகள். எனவே இவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை.

இறைவனுக்காக ஒன்று கூடுகின்ற கூட்டம் தன்னைத்தானே கவனித்துக் கொள்கிறது. பணி செய்கின்றவர்கள் மிகவும் குறைவாகத்தான் இருப்பார்கள். கூட்டத்தில் கலந்து கொள்கின்றவர்கள் அல்லாஹ்வுக்காக வருகிறார்கள். எனவே ஒவ்வொருவரும் தன்னுடைய தேவையை தானே பூர்த்தி செய்கிறார்கள். எனவே கட்டாயப்படுத்தவோ அல்லது வேறு ஏதாவதோ தேவைப்படுவதில்லை. இந்த உணர்வை ஜமாஅத் அல்லாதவர்கள் உலகில் எந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டாலும் வெளிப்படுத்துகின்றனர்.

அமைதி மற்றும் அன்பு மிக அதிகமாக இருந்தது. இதை நாங்கள் வேறு எங்கும் கண்டதில்லை என்றுதான் எல்லாரும் கூறினார்கள். ஒவ்வொருவரும் பிறருடைய உணர்வை மதிக்கிறார்கள் என்று தெரிந்தது. இவ்வளவு பெரிய கூட்டத்திற்கு உணவு வழங்குவது அதுவும் எந்த சச்சரவும் இன்றி மிக அமைதியான முறையில் வழங்குவதை எல்லாரும் மிக ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். பிறகு ஒருவர் மற்றவருக்காக கொண்டுள்ள தியாக மனப்பான்மை. இது இவர்களுக்கு முற்றிலும் புதிதாக இருந்தது.

ஆக இதுவும் ஒரு அமைதியான தப்லீக் ஆகும். இந்த தப்லீகை ஜல்ஸாவில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் செய்கிறார். எனவே இந்த சிறப்பம்சத்தை எப்போதும் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இதை நிலைநாட்டுங்கள். சில நேரம் தப்லீகில் பெரிய பெரிய ஆதாரங்கள் காட்டாத வேலையை செயல்ரீதியாக நன்னடத்தையின் வேலையை காட்டி விடுகிறது.

பல்கேரியாவிலிருந்து 90 நபர்கள் கொண்ட ஜமாஅத்தின் குழு வந்திருந்தது. அங்கு ஜமாஅத்திற்கு கடுமையான எதிர்ப்பு இருந்து வருகிறது. அங்குள்ள அரசாங்கத்தின் முஃப்தி ஜமாஅத்திற்கு ஒரு கடுமையான எதிரி ஆவார். இந்த முஃப்தியின் காரணமாக நமது ஜமாஅத்தின் மீது அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இருந்த போதிலும் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர். வந்திருந்த குழுவில் பாதி பேர் அஹ்மதிகள்; மீதி பேர் ஜமாஅத் அல்லாத பிற நண்பர்கள் ஆவர். இவ்வாறு கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் இவ்வளவு எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் எதிர்ப்பின்

காரணமாக இவர்கள் உண்மையை சத்தியத்தை அறிய விரும்புகிறார்கள் என்பதற்கு இது சான்றாகும். அரசாங்கம் விதிக்கின்ற கட்டுப்பாடுகள் கூட தப்லீகிற்கான வேலையைச் செய்கிறது. எதிர்ப்பின் காரணமாக கிறிஸ்தவத்திற்கும் இதன் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களும் அதிக எண்ணிக்கையில் ஜல்ஸாவில் கலந்து கொண்டார்கள்.

ஒரு தந்தை தனது மகளை அழைத்துக் கொண்டு வந்திருந்தார். அவர்களோடு நான் தனியாக சந்தித்தேன். அப்போது அவர் இவ்வாறு கூறினார். கடந்த முறை நான் எனது மகனோடு இங்கு வந்திருந்தேன். ஜல்ஸா முடிந்து திரும்பிச் சென்றதும் அவன் ஜல்ஸாவிற்கு வந்த காரணத்தால் அவன் பெயரில் அரசு நடவடிக்கை எடுத்து அவனது போலீஸ் வேலையை விட்டு அவனை அகற்றி விட்டார்கள். வழக்கு தொடுத்து அவனது உரிமையைப் பெற வேண்டும் என்று நான் கூறினேன். ஏனென்றால் அங்கு சட்டம் அவ்வளவு கடுமையானதும் இல்லை. அதற்கு அவர் வழக்கு தொடுத்தாலும் அந்த வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை என்று கூறினார். ஜெர்மனியில் அஹ்மதிகளின் ஜல்ஸாவிற்கு சென்றதுதான் அவன் செய்த குற்றம் ஆகும். பிறகு நான் அந்த தந்தையிடம் உங்கள் மகனை கவனமாக இருக்கச் சொல்லுங்கள். எங்களுக்காக அவர் தம்மையே கஷ்டத்தில் ஆழ்த்திக் கொள்ள வேண்டாம் என்று கூறினேன். அதற்கு அவர் இவர்களிடம் (அஹ்மதிகளிடம்) சத்தியம் இருக்கிறது. இவர்கள் கொடுமைக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்று எனக்கு தெரிகிறது என்று என் மகன் கூறுகிறான் என்று அவர் கூறினார். எனவே நான் எப்போதும் இவர்களுக்கு தான் உதவி செய்வேன். எனது வேலை போனாலும் பரவாயில்லை. எனக்கு கஷ்டங்கள் வந்தாலும் பரவாயில்லை என்று மகன் கூறுகிறான் என்று தந்தை கூறினார். ஆக இந்த உணர்வுகளை இவர்களுடைய உள்ளத்தில் யார் போடுகிறார்? அல்லாஹ்வைத் தவிர யாராலும் இதை உருவாக்க முடியாது. இவர்கள் அஹ்மதிய்யத்திற்கு மிக அருகில் இருக்கிறார்கள். அல்லாஹ் மிக விரைவாக இவர்களது உள்ளத்தை திறப்பானாக.

இவர்களுடைய மகன் நல்ல படிப்பறிவு உள்ளவர். நமது சில நூல்களையும் சில மேற்கோள்களையும் இவர் மொழியாக்கம் செய்துள்ளார். இங்கு பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு குடும்பம் இருக்கிறது. பெரிய எண்ணிக்கையிலான ஜமாஅத்தை இவர்கள் கவனித்து வருகிறார்கள். முபல்லிக் யாரும் கிடையாது. நான் ஏற்கனவே கூறி வந்த பெண்மனி ஜமாஅத்தோடு நல்ல தொடர்புடையவர் ஆவார். இவர் ஒரு கிறித்தவ குடும்பத்தைச் சேர்ந்தவர். இருப்பினும் ஜமாஅத்தின் நூல்களையும் மேற்கோள்களையும் இவர் மொழிபெயர்ப்பு செய்து வருகிறார். இதன் காரணமாக இவர் உர்து கற்றுக் கொண்டார்கள். நான் முபல்லிக் சாஹிப் மூலம் இவர்களது தந்தையிடம் பேசிக் கொண்டிருக்கும் போது இந்த பெண் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள். அப்போது இவளுக்கு புரிகிறது என்று நான் நினைத்து அவளிடம் கேட்டேன். அதற்கு அவள் ஆம் நான் உர்து நன்றாக கற்றுக் கொண்டேன் என்று கூறினாள். இவர்களுடைய உள்ளத்தையும் அல்லாஹ் திறப்பானாக. இந்தப் பெண் உர்து பேசும் போது இந்த மக்கள் ஜமாஅத்திற்கு அருகே வர வேண்டும் என்பதற்காக உர்து கற்கிறார்கள். இவர்கள் இன்னும் பைஅத் செய்யவில்லை. ஆனால் உர்துவை தாய் மொழியாகக் கொண்ட பெற்றோர்களின் பிள்ளைகள் இதை மறந்து வருகிறார்கள். பின்னால் வருபவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மொழியிலேயே படித்து பழைய அஹ்மதிகளை விட முன்னேறி விடுவார் போலத் தெரிகிறது.

வந்திருந்த இந்த குழுவில் சில பத்திரிகையாளர்களும் இருந்தனர். இவர்கள் தங்களது நாடுகளில் ஜல்ஸாவின் செய்திகளை புகைப்படத்தோடு சேர்த்து வெளியிட்டுள்ளார்கள். இந்த அடிப்படையிலும் ஜல்ஸா தப்லீகிற்கான ஒரு வழியாக அமைந்து விட்டது. ஜமாஅத்தை அறிமுகப்படுத்தும் ஒரு வழியாக ஆகி விட்டது. பத்திரிகையாளர்களுக்கு நான் ஜமாஅத்தை அறிமுகப்படுத்தியதோடு மனித நேயத்திற்காக நாம் உலகமெங்கும் செய்து வரும் தொண்டுகளை எடுத்துக் கூறினேன். மனித நேயத்தை மதிக்க வேண்டும் என்று அவர்களுக்கு நான் கவனமூட்டினேன். இது தொடர்பான செய்திகளை தத்தமது செய்தித்தாள்களில் எழுதி வருவதாக அவர்கள் வாக்குறுதியளித்தனர்.

ஜல்ஸாவிற்குப் பிறகு ஜெர்மன் ஆண்கள் மற்றும் பெண்களோடு தனித்தனியே குழுக்களாக சந்திப்பு இருந்தது. ஜமாஅத்திற்கு மிக அருகில் இருந்த இரண்டு பெண்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். இலண்டனில் ஒருவர்; ஜெர்மனியைச் சேர்ந்த ஒருவர்; இன்னொருவர் எகிப்தைச் சார்ந்தவர் ஆவார். ஜெர்மனியைச் சேர்ந்த பெண்மணி உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தார். நான் ஏதாவது கேள்வி கேட்டால் உணர்ச்சியின் காரணமாக பேசக் கூட முடியாமல் மீண்டும் மீண்டும் அழுது கொண்டேயிருந்தார். இது வெறும் நடிப்பு ஆக இருக்கவே முடியாது. சில புதிய அஹ்மதிப் பெண்கள் தங்களது சூழ்நிலையை கூறி அமைதியின்மையை வெளிப்படுத்தினார்கள். சிலர் வெளியே கடைகளில் வேலை பார்ப்பவர்கள் ஆவர். சில கடைகளில் பன்றி இறைச்சி அல்லது மது சம்பந்தமான வேலைகளை நேரடியாக செய்யாவிட்டாலும் அந்த கடைகளில் வேலை பார்த்தார்கள். இதன் காரணமாக அவர்களிடம் சந்தா வாங்குவதில்லை. இதைக் கூறி மிகவும் நிம்மதி இழந்து அந்தப் பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் நான் நீங்கள் மது ஊற்றிக் கொடுக்கும் பணியிலோ அல்லது இதுபோன்ற நேரடியாக மதுவோடு அல்லது பன்றிகளோடு தொடர்புடைய வேலையாக இல்லாவிட்டால் இதனால் எந்த குற்றமும் இல்லை. ஆனால் இதுபோன்ற ஏதாவது வேலையை செய்தால் சந்தா வாங்கப்படமாட்டாது. நீங்கள் உங்கள் வயிற்றுப் பிழைப்பிற்கு ஏதாவது வேலை செய்ய வேண்டும் என்பது உங்கள் நிர்பந்தம். ஆனால் ஜமாஅத்திற்கு எந்த நிர்பந்தமும் இல்லை என்று கூறினேன்.

பிறகு ஜெர்மனி மற்றும் ஐரோப்பிய அஹ்மதி ஆண்களேடு சந்திப்பு இருந்தது. ஜமாஅத்திற்கு மிக நெருக்கமானவர்கள் இதில் அதிகமானோர் இருந்தார்கள். ஜெர்மனி மற்றும் ஹங்கேரியிலிருந்து நண்பர்கள் வந்திருந்தனர். ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைக் கண்டு ஜமாஅத்தில் இணைந்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜல்ஸா நடத்துவதன் நோக்கத்தை கூறும்போது அதில் ஒரு நோக்கமாக இதை கூறுகிறார்கள். அதாவது பிற சமுதாயங்களில் தப்லீகிற்கான வழிகளைத் தேட வேண்டும். ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைப் பார்த்தும் கேட்டும் ஜல்ஸாவில் அருளால் நல்ல விளைவு ஏற்படுவதன் காரணமாக அல்லாஹ் நமக்கு வெற்றிக் கனிகளை வழங்குகிறான்.

U.K.-ல் புதிதாக நமக்கு கிடைத்த நாடுகளைக் கூறும்போது லிதுவேனியாவின் பெயரையும் குறிப்பிட்டிருந்தேன். இந்த நாடு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் காலத்திலேயே ஜமாஅத்திற்கு கிடைத்து விட்டது என்று எனக்கு கூறினார்கள். மீண்டும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக இந்த நாட்டின் பெயரை கூறியுள்ளேன் என்று எனக்கு கூறப்பட்டது. இதைப் பற்றி நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். அதாவது நாடுகளின் மொத்த எண்ணிக்கை 193 என்று நான் கூறினேன். இது இந்த நாட்டையும் சேர்த்து கூறப்பட்ட எண்ணிக்கையாகும். 1992-ல் இங்கு ஜமாஅத் ஆரம்பமானது. அப்போது ஒரு சிலர் பைஅத் செய்திருந்தார்கள். அங்கு மிஷன் ஹவுஸும் திறக்கப்பட்டது. முபல்லிக்குகளையும் அனுப்பப்பட்டது. அதே சமயம் அங்கு ஜமாஅத்தின் நிலைமை மிகவும் மோசமடைந்தது. அஹ்மதிகளாக இருந்த ஒரு சிலரும் எதிரிகளோடு இணைந்து கொண்டு ஜமாஅத்தை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். எதிரியாகவே நடந்து கொண்டார்கள். இந்த சூழ்நிலையில் ஏப்ரல் 1994 -ல் உடனடியாக அங்கிருந்த முபல்லிக்கையும் அழைக்க வேண்டியதாயிற்று. 1995-ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் வழிகாட்டுதலுக்கேற்ப லிதுவேனியாவின் பெயரை ஜமாஅத்தின் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டது. இதற்கான அறிவிப்பையும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களே செய்தார்கள்.

இந்த நாடு ஜெர்மனியின் பொறுப்பில் இருந்தது. இப்போது 14 வருடங்களுக்குப் பிறகு இந்த நாட்டில் புதிதாக அஹ்மதிய்யத் மலர்ந்துள்ளது. ஒரு தூய பெண்மணி ஜமாஅத்தில் சேர்ந்துள்ளார்கள். பாகிஸ்தானில் இவர்களுக்கு திருமணமாகியுள்ளது. அல்லாஹ்வின் அருளால் தொடர்பு இன்றும் வருகிறது. அதிகமாக வருகிறது. இன்ஷா அல்லாஹ் ஜமாஅத் இங்கு வளரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அல்லாஹ்வின் அருளால் இந்தப் பயணம் மிகவும் வெற்றிகரமாக இருந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு ரமலான் தொடங்க உள்ளது. இந்த ஆன்மீக மாற்றத்தின் தொடரை நிலைத்திருக்கச் செய்யுங்கள்.

துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். தக்வாவில் உயர்வதற்கும் துஆவை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கும் நமக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கப்போகிறது. எனவே நம்மில் ஒவ்வொருவரும் இவ்வாறு துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமது ஆன்மீக வளர்ச்சிக்கான நல்வாய்ப்பை வழங்குவான். நம்மை தூய்மைப்படுத்துவானாக. நம்மில் ஏற்படுத்திய இந்த தூய மாற்றத்தை நிரந்தரமான மாற்றமாக ஆக்குவானாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எல்லாவற்றுக்கும் முதன்மையானது துஆ. மனிதன் தன்னை பாவத்திலிருந்து தூய்மைப்படுத்துவதற்காக துஆ செய்ய வேண்டும். எல்லா துஆவிற்கான ஆணி வேர் இந்த துஆவாகும். ஏனென்றால் இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு மனிதன் எல்லா வகையான அசுத்தத்திலிருந்தும் தூய்மையாகி இறைவனின் பார்வையில் தூயவனாக மாறி விட்டால், மனிதனின் தேவைக்காக செய்யப்படுகின்ற பிற துஆக்களை செய்ய வேண்டிய அவசியம் கூட ஏற்படுவதில்லை. அது தானாகவே நிறைவேறிக் கொண்டே செல்லும். மிகவும் கடின உழைப்பாலும் விடா முயற்சியாலும் செய்ய வேண்டிய துஆ இதுவே ஆகும். மனிதன் பாவங்களிலிருந்து தூய்மையாகி விட வேண்டும். இறைவனின் பார்வையில் இறையச்சமுடையவனாகவும் நேர்மையானவனாகவும் ஆகிவிட வேண்டும்.

இந்த நுட்பமான விஷயத்தைப் புரிந்து கொண்டு நமக்காக துஆ செய்பவர்களாக நாம் இருக்க அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக. இந்த ரமலான மாதத்தில் அல்லாஹ்வின் விருப்பத்தையும் அருட்கொடைகளையும் ஈர்த்தவாறு நாம் நமது வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆகிவிடுகின்ற நல்ல தூய மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாக இருப்போமாக.

பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் எல்லா தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக. ஏனென்றால் ரமலானில் எதிர்ப்பு மிகவும் அதிகமாகி விடுகிறது. இந்த அறிவற்ற முஸ்லிம்களைப் பொருத்தவரை ரமலானில் நன்மையைப் பெறுவதற்கு அஹ்மதிகளை எதிர்க்க வேண்டும். அவர்களைச் சீண்ட வேண்டும். அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது தான். எந்தெந்த நாடுகளில் எல்லாம் அஹ்மதிய்யத்திற்கு எதிர்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் அஹ்மதிகளை அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைப்பானாக. இந்த ரமலான் ஜமாஅத்திற்கு எண்ணற்ற அருட்கொடைகளையும் பரக்கத்தையும் கொண்டு வரட்டுமாக. இதிலிருந்து சரியான முறையில் நாம் பயனடைபவர்களாக இருப்போமாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 21.08.2009**

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**